# திருவள்ளூர் நகர்மன்றக் கூட்டத்தில் த.வெ.க.வினர் அராஜகம்!

# எம்.எல்.ஏ.க்கள் அத்துமீறி நுழைவு - பெண் கவுன்சிலர்களை தள்ளிவிட்டு அடாவடி!

## 2 மணி நேரம் முடங்கிய நகர்மன்றக் கூட்டம் – திருவள்ளூரில் பரபரப்பு!



*திருவள்ளூர், ஜூன் 26:*

உள்ளாட்சி அமைப்புகளின் சுயாட்சியையும், ஜனநாயக மரபுகளையும் மதிக்காமல் அதிகார பலத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாக திருவள்ளூர் நகர்மன்றக் கூட்டம் நேற்று மாறியதாக கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. மக்களின் பிரச்சினைகளை தீர்க்க நடத்தப்பட்ட நகர்மன்றக் கூட்டம், த.வெ.க. அரசின் அரசியல் ஆதிக்க அரங்கேற்றமாக மாறியதால் பொது மக்களிடையே அதிருப்தி வெடித்துள்ளது.

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன் தலைமையில் நகர்மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. நகரின் குடிநீர் தட்டுப்பாடு, சாலைப் பழுதுகள், மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு பராமரிப்பு உள்ளிட்ட மக்கள் நலப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வேண்டிய முக்கியக் கூட்டமாக இது இருந்தது.

ஆனால் கூட்டம் தொடங்குவதற்கு முன்பே த.வெ.க. தெற்கு மாவட்ட செயலாளர் ஆர்.பிரகாசம் (எ) குட்டி, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் டி.அருண்குமார் உள்ளிட்டோர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் நகராட்சி அலுவலக வளாகத்தை முற்றுகையிட்டனர். பின்னர் முதலமைச்சர் விஜயின் புகைப்படத்தை கையில் ஏந்தியபடி நகர்மன்றக் கூடத்திற்குள் நுழைந்து கூட்ட நடவடிக்கைகளை முடக்க முயன்றனர்

நகர்மன்றத்தில் எந்த புகைப்படத்தையும் வைப்பதற்கு மன்றத் தீர்மானமும், அரசாணை நடைமுறைகளும் அவசியம் என்று நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விளக்கம் அளித்த போதிலும், அதை ஏற்க மறுத்த த.வெ.க.வினர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நகர்மன்றத் தலைவர் அமரும் இடத்தின் முன்பாக அமர்ந்து கூட்டம் நடைபெறாமல் தடுத்ததால், இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக கூட்டம் முடங்கியதாக கூறப்படுகிறது.

### பெண் மக்கள் பிரதிநிதி தள்ளிவிட்டதால் பரபரப்பு

இந்த பரபரப்பின் உச்சக்கட்டமாக, தி.மு.க. பெண் கவுன்சிலர் வசந்தி வேலாயுதம் நகர்மன்றக் கூடத்திற்குள் செல்ல முயன்றபோது, த.வெ.க. நிர்வாகிகள் அவரை தள்ளிவிட்டனர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கீழே விழுந்த அவரை சக கவுன்சிலர்கள் எழுப்பி இருக்கையில் அமர வைத்தனர்.

ஒரு பெண் மக்கள் பிரதிநிதியே பாதுகாப்பாக நகர்மன்றக் கூட்டத்தில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பது, த.வெ.க. ஆட்சியில் ஜனநாயக அமைப்புகளின் நிலை என்ன என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. பெண்களின் கண்ணியத்தையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உரிமைகளையும் மதிக்காத அரசியல் கலாச்சாரம் வளர்க்கப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

### கதவை உடைத்து நுழைய முயற்சி

நகர்மன்றக் கூடத்திற்குள் மேலும் பலர் நுழைய முயன்றபோது காவல்துறையினர் தலையிட்டனர். அத்துமீறி நுழைய முயன்றவர்களை தடுத்து நிறுத்திய போது தள்ளுமுள்ளு ஏற்பட்டது காவல்துறையினரின் எச்சரிக்கையையும் மீறி ஆளுங்கட்சியில் உள்ள காவல்துறையை ஒழுக என முழக்கங்கள் எழுப்பப்பட்டதால் நகராட்சி அலுவலக வளாகம் போராட்டக் களமாக மாறியது.

### மக்கள் பிரச்சினைகள் ஓரங்கட்டப்பட்டன!

குடிநீர் இல்லை, சாலைகள் சேதமடைந்துள்ளன, வடிகால் வசதிகள் குறைபாடாக உள்ளன, தெருவிளக்குகள் பராமரிப்பின்றி கிடக்கின்றன என்று மக்கள் அவதிப்பட்டு வரும் நிலையில், அவற்றைப் பற்றி விவாதிக்க வேண்டிய நகர்மன்றக் கூட்டம் அரசியல் பலப்பரீட்சைக்கான மேடையாக மாற்றப்பட்டிருப்பது வேதனையளிப்பதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் உள்ளாட்சி அமைப்புகளை அரசியல் அதிகாரக் காட்சிக்கான அரங்கமாக மாற்றும் இந்த அணுகுமுறை தொடர்ந்தால், ஜனநாயக அமைப்புகளின் மாண்பு எங்கே நிலைநிறுத்தப்படும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

### ஜனநாயகத்தை மிரட்டலால் நடத்த முடியுமா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களை அழைத்து வந்து முடக்குவது ஜனநாயகமா? சட்ட நடைமுறைகளை புறக்கணித்து அரசியல் அழுத்தம் செலுத்துவது புதிய ஆட்சி முறையா? என்ற கேள்விகள் திருவள்ளூர் முழுவதும் பேசுபொருளாகியுள்ளன.

நகர்மன்றத் தலைவர் உதயமலர் பொன் பாண்டியன், நகர்மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும், பெண் கவுன்சிலர் தள்ளிவிட்டு விவகாரம் தொடர்பாகவும் காவல்துறையில் புகார் அளித்து உரிய நடவடிக்கை கோரப்படும் என்று தெரிவித்தார்.

உள்ளாட்சி அமைப்புகளின் சுயாட்சியை மதிக்காமல், அதிகார பலத்தால் ஜனநாயகத்தை அச்சுறுத்தும் போக்கு தொடர்ந்தால் அது மக்கள் ஆட்சிக்கே ஆபத்தாக மாறும் என்பதே திருவள்ளூரில் எழுந்துள்ள முக்கியக் கவலையாகும்.

# அப்பா அனைத்துமாய் இருக்கிறார்!



ஐந்து ஆண்டின் வளர்ச்சியில்
உயர்ந்த பொருளாதாரத்தின்
ஒவ்வொரு படியிலும்
உழைப்பின் அடையாளமாய் அப்பா இருக்கிறார்!

பசியோடு பள்ளி வந்த
பச்சிளம் குழந்தையின்
சிரிப்பில் மலர்ந்த காலை உணவின் வாசத்தில்
அன்பாக அப்பா இருக்கிறார்!

பேருந்தில் பயணிக்கும்
பெண் குழந்தையின் தன்னம்பிக்கையில்,
"நானும் சாதிப்பேன்" என்ற
அவள் கனவின் சக்கரத்தில்
அப்பா இருக்கிறார்!

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்
என்ற
சமூக நீதியைச் செயலாக்கிய
ஒவ்வொரு வாய்ப்பிலும்
அப்பா இருக்கிறார்!

"பெண் படித்தால் குடும்பம் உயரும்" என்று
புதுமைப்பெண் திட்டம் எழுதிய
ஒவ்வொரு பட்டமளிப்பு மேடையிலும்
அப்பா இருக்கிறார்!

தமிழ்நாட்டின் வளர்ச்சி
காகிதத்தில் எழுதப்பட்ட புள்ளிவிவரம் அல்ல...
மக்களின் வாழ்வில் எழுதப்பட்ட
புதிய வரலாறு!
அதனால்...

பசியை போக்கிய சிரிப்பில் அப்பா இருக்கிறார்!

படிப்பைத் தொடரும் பெண்ணின் விழிகளில் அப்பா இருக்கிறார்!

சமத்துவம் மலரும் சமூகத்தின் இதயத்தில் அப்பா இருக்கிறார்!

தமிழ்நாட்டின் ஒவ்வொரு முன்னேற்றப் பாதையிலும் அப்பா இருக்கிறார்!

நிழலைத் தேடுபவர்களுக்கு
மரம் தெரியாது...

ஒரு மனிதரைத் தேடினால் முகவரி கிடைக்கும்...

ஒரு தலைவரின் சிந்தனையைத் தேடினால் தலைமுறைகள் கிடைக்கும்!

அப்பா அனைத்துமாய் இருக்கிறார்!



மருத்துவர்
**முருகதாஸ்**
விருத்தாசலம்

# "கல்வி நிலையத்திலும் த.வெ.க. ஆணவ அரசியல்"

# கட்டணம் கேட்ட பள்ளி நிர்வாகத்திடம் ரகளை செய்ததாக நிர்வாகி மீது புகார்!

## பள்ளி வாசலில் காரை குறுக்கே நிறுத்தி அராஜகம் – பொதுமக்கள் அச்சம்!

*திருவள்ளூர், ஜூன் 26:*

திருவள்ளூர் அருகே காஞ்சிபாடி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளியில் கல்விக் கட்டண விவகாரத்தை முன்னிட்டு த.வெ.க. நிர்வாகி ஒருவர் அராஜகத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளியில் பயிலும் தனது உறவினர் மாணவரின் கல்விக் கட்டணமாக சுமார் ரூ.13 ஆயிரம் நிலுவையில் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், மாணவருக்கு மாற்றுச் சான்றிதழ் (டி.சி.) வழங்க வேண்டும் என வலியுறுத்தி த.வெ.க. நிர்வாகியான ராஜேஷ் என்பவர் பள்ளிக்குச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்போது, கல்விக் கட்டணத் தொகையை செலுத்த முடியாது என்றும், உடனடியாக மாற்றுச் சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் பள்ளி நிர்வாகத்திடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பள்ளி வளாகம் மற்றும் அதன் நுழைவாயில் பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியதாகவும், பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்களிடம் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் புகார் எழுந்துள்ளது.

இது மட்டுமின்றி, பள்ளி வாசலின் முன்பாக தனது காரை குறுக்கே நிறுத்தி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிரமப்படும்படி செயல்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் பள்ளிக்கு வந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கடும் அவதிக்குள்ளானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்வி நிலையங்கள் என்பது மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் புனிதமான இடங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பள்ளி நிர்வாகங்களை மிரட்டும் போக்கு அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். கல்வி நிறுவனங்களுக்குள்ளேயே இத்தகைய அழுத்த அரசியல் நடைபெறுவதாக எழும் குற்றச்சாட்டுகள் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த சில மாதங்களாக திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் த.வெ.க. நிர்வாகிகள் தொடர்பான சர்ச்சைகள், மிரட்டல் புகார்கள் மற்றும் அதிகாரதுஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டுகின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வதால் பொதுமக்களிடையே அச்ச உணர்வு அதிகரித்து வருவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர்

# பி.கே.சேகர்பாபு மைத்துனர் எம்.கண்ணன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை, ஜூன் 26*

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. மைத்துனர் எம்.கண்ணன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று நடைபெறுகிறது. அன்னாரின் மறைவு செய்தி அறிந்த கழகத்தினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்களது மைத்துனர் எம்.கண்ணன்

சென்னை கிழக்கு வயது 62 அவர்கள் நேற்று 25.6.2026 வியாழக்கிழமை மதியம் 2.00 மணியளவில் உடல்நலம் குன்றி இயற்கை எய்தினார்.

அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (26.06.26 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, நாராயண மேஸ்திரி 1வது தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஓட்டேரி சுடுகாட்டில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### நந்தனம் கி.மதி எம்.சி. தலைமை! எஸ்.முரளி முன்னிலையில்

# மயிலை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் பிறந்தநாள்! 2003 பேருக்கு நல உதவிகள் - அறுசுவை உணவு!

## மயிலை த.வேலு – அன்பகம் கலை – தமிழச்சி தங்கபாண்டியன் வழங்குகின்றனர்!

*சென்னை, ஜூன் 26*

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி தி.மு.க சார்பில் காலத்தை வென்ற கழகச்சூரியன் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா முன்னிட்டு 2003 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் & அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில் 28.06.2026 ஞாயிற்றுக் கிழமை மதியம் 11.00 மணியளவில் 121 அ வட்டம், ரோட்டேரி நகர் பிரதான சாலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் நலத்திட்டஉதவிகள் & அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இதில் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, ஜி.ஆர்.இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யாவிஸ்வநாதன், ஜி.முருகையன், சீ.கிருஷ்ணமூர்த்தி, டி.ராஜவேலு, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ச.லோகநாதன் எஸ்.கணேசன் பி.எஸ்.ஆறுமுகம் எஸ்.பலராமன் பி.இளவரசு சரண்யாசித்திரை பி.முனுசாமி சி.ரமேஷ் எம்.காசி செ.ஜெயசீலன் எம்.ஜே.சுதாகர்ராவ் த.மோகன் கோ.முருகன் M.ராஜ்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாநில மாவட்ட நிர்வாகிகள் நந்தனம் நம்பிராஜன் சு.வில்லவன் யோகேஷ் ரவி எஸ்.மோகன் டாக்டர்ஜெ.அருண் டாக்டர்கலைகதிரவன் மு.தம்பிதுரை சி.தசரதன் கோ.சு.மணி செல்விசௌந்தரராஜன் வேலு சம்பந்தம் எம்.ஆறுமுகம் மந்தைவெளி அ.பாபு அ.வாசுதேவன் ஜெ.ஜானகிராமன் ஜி.டி.அம்பேத்கார் ஆ.சந்திரசேகர் நந்தனம் வேதா மு.சத்யா கே.மலர் என்.அன்பழகன் மயிலை கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.முனுசாமி சிமள்கோ.சேகர் பி.எல்.தாஸ் ஏ.குமாரி எல்.உதயகுமார்

மயிலை கிழக்கு பகுதி வட்டசெயலாளர்கள் ஏ.தாஸ் மா.பா.அன்பு அ.தவநேசன் வி.வெற்றிவேல் கோ. கண்ணன் துரைப்பார்த்திபன் பா.பொன்னுசாமி அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ராஜா அன்பழன் ம.ஆனந்தன் எஸ்.பானுசலீம் பி.கே.ராஜேஷ் கண்ணா போட்டோ மதன் எஸ்.சரவணன் விஜய்வெங்கடேசன் ஆர்.கதிரவன் மயிலை ஆர்.பாலு சி.கணேஷ்பாண்டியன் புலியூர் டி.மோசஸ் ச.சண்முகநாதன் சாந்தோம் ஆ.அந்தோணி ஜெ.ஜெகன்ராஜ் ஆர்.குமரன் ஏ.சத்தியமூர்த்தி டாக்டர் கோ.சக்திவிக்னேஷ் என்.எஸ்.பாலசுப்பிரமணி என்.வடிவேல் இரா.சக்கரவர்த்தி கே.வெங்கட்ராமன் மயிலை பகுதி அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கேபிள்த.சீனிவாசன் மு.சதீஷ் தா.தாமுவசந்த்கபாலி ம.மஞ்சுராஜி (எ) என்.கே.கே.கிருஷ்ணராஜ் எஸ்.விஜயா ப.செந்தாமரை பி.சித்ரா டி.கிருஷ்ணவேணி WEFAS த.பத்மநாபன் ஜெ.புகழேந்தி இ.மணிமாறன் இரா.சதாசிவம் ஏ.பாஸ்கர் ம.நந்தகோபால் இரா.உதயகுமார் எம்.ஏ.எஸ்.செந்தில்குமார் ஏ.தேவேந்திரன் வி.ஜான்சன் ம.சரண்யா எம்.பிரபாகரன் மா.சுதாகர் பாக்சர்ஆ.ரவி லபள்எம்.கோவிந்தன் நந்தனம் சிவா கே.ஜோதி எம்.மாரிசாமி இ.சிறைச்செல்வன் எஸ்.சேகர் த.சங்கர் ஆ.ராஜேந்திரன் வி.சதீஷ்குமார் எஸ்.ஜெயகர் டி.ரகு எஸ்.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.


திினேஷ்மாணிக்கம், ம.முகிலன், ஆ.கார்த்திக், எம்.சரண்யா, எம்.முகமது சுலைமான், சி.வி.திவான்குமார், ஜெ.ராஜேஷ்குமார், சிக்கன் பாபு சையத், எ.வினோத்குமார், டி.ஹரிதாஸ், வே.தன்ராஜ் நன்றி கூறுகின்றனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் பிறந்த தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அ. இராசமாணிக்கம்
## ஜூன் 26 (2016)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**